அரசாங்க நிருவாக சுற்று நிருப இல: 385........

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு. 07.
1987.....11.19.........

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

<u>நடுத்தரத் தொழிநுட்பச் சேவைப்</u>
<u>பிரமாணக் குறிப்பு செயற்படுத்தல்</u>

1978.10.31ஆம் திகதியிடப்பட்ட 276ஆம் இலக்க தாபனச் சுற்று நிருபக் கடிதத்துக்கும் நடுத்தரத் தொழிநுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்புக்கும் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. நடுத்தரத் தொழிநுட்பச் சேவை பிரமாணக் குறிப்பின் ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் பிரிவு பின்வரும் பிரிவு பிரதியீடு செய்யப்படுவதன் மூலம் திருத்தப்படுகின்றது.

> "2.2 வகுப்பு 11 பிரிவு 'அ' வுக்கான பதவியுயர்வு, வகுப்பு 11 பிரிவு 'ஆ' வில் மூன்று வருடத் திருப்திகர சேவையைப் பூர்த்தி செய்திருப்பதுடன் விதிக்கப் பெற்ற திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தியும் உள்ள அவ்வகுப்புச் சார் உத்தியோகத்தர்களிடமிருந்து அல்லது ஆண்டொன்றுக்கு 16,560/- ரூபா வேதனநிலையில் ஒரு வருடம் சேவையாற்றியிருப்பதுடன் வகுப்பு 11 பிரிவு 'ஆ' வில் ஆறு வருடம் திருப்திகர சேவையைப் பூர்த்தி செய்துமிருக்கும் உத்தியோகத்தர்களிலிருந்து, செய்யப்படும்."

03. நடுத்தரத் தொழிநுட்பச் சேவையிலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திட்டத்தினை இதற்கமைய திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

டி.பீ.ஐ.பி.எஸ். சிறிவர்த்தன
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.